# பெப்ரவரி – 21 – வியாழன்

## புனித தமியான் இராயப்பர்

### சீயோனில் ஆண்டவரின் பெயர் போற்றப்படும்: திபா. 102:21

## முதல் வாசகம் : தொடக்க நூல் 9 : 1 – 13

கடவுள் நோவாவிற்கும் அவர் புதல்வருக்கும் ஆசி வழங்கிக் கூறியது: "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். மண்ணுலகின் விலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன, கடலின் மீன்கள் அனைத்தும் உங்களுக்கு அஞ்சி நடுங்கட்டும்! அவை உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நடமாடி உயிர்வாழும் அனைத்தும் உங்களுக்கு உணவாகட்டும். உங்களுக்குப் பசுமையான செடிகளை உணவாகத் தந்தது போல இவை எல்லாவற்றையும் தருகிறேன். இறைச்சியை அதன் உயிராகிய இரத்தத்தோடு உண்ணாதீர்கள். உங்கள் உயிராகிய இரத்தத்திற்கு நான் ஈடு கேட்பேன். ஒரு மனிதரின் இரத்தத்தை எவர் சிந்துகிறாரோ அவரது இரத்தம் வேறொரு மனிதரால் சிந்தப்படும். ஏனெனில், கடவுள் மனிதரைத் தம் உருவில் உண்டாக்கினார். நீங்கள் பலுகிப் பெருகிப் பன்மடங்காகி மண்ணுலகை நிரப்புங்கள்." கடவுள் நோவாவிடமும் அவருடனிருந்த அவர் புதல்வரிடமும் கூறியது. "இதோ! நான் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் வழிமரபினரோடும் பேழையிலிருந்து வெளிவந்து உங்களோடிருக்கும் உயிரினங்கள், பறவைகள்,கால்நடைகள், நிலத்தில் உங்களுடன் உயிர்வாழும் விலங்கினங்கள் எல்லாவற்றோடும், மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலைநாட்டுகிறேன். உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன் சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது. மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வரவே வராது." அப்பொழுது கடவுள், "எனக்கும் உங்களுக்கும் உங்களுடன் இருக்கும் உயிருள்ள எல்லாவற்றிற் குமிடையே தலைமுறைதோறும் என்றென்றும் இருக்கும்படி, நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக, என் வில்லை மேகத்தின்மேல் வைக்கிறேன். எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும்.

**பதில்பாடல்:** ஆண்டவர் விண்ணுலகினின்று வையகத்தை கண்நோக்கினார்.

## நற்செய்தி : மாற்கு 8 : 27 - 33

அக்காலத்தில் இயேசு தம் சீடருடன் பிலிப்புச் செசரியாவைச் சார்ந்த ஊர்களுக்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில் அவர் தம் சீடரை நோக்கி, "நான் யார் என மக்கள் சொல்கிறார்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் அவரிடம், "சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் இறைவாக்கினருள் ஒருவர் எனவும் சொல்கின்றனர்" என்றார்கள். "ஆனால் நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள்?" என்று அவர் அவர்களைக் கேட்க, பேதுரு மறுமொழியாக, "நீர் மெசியா" என்று உரைத்தார். தம்மைப்பற்றி எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று அவர்களிடம் அவர் கண்டிப்பாய்க் கூறினார். "மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்று நாள்களுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டும்" என்று இயேசு அவர்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினார். இதையெல்லாம் அவர் வெளிப்படையாகவே சொன்னார். பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்து கொண்டார். ஆனால் இயேசு தம் சீடர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து பேதுருவிடம், "என் கண் முன் நில்லாதே, சாத்தானே. ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்" என்று கடிந்து கொண்டார்.

**தியானம்:** “நீங்கள் நான் யார் எனச்சொல்கிறீர்கள்” என இறைமகன் இயேசு அன்று கேட்டபோது தச்சன் சூசையின் மகன் அதிகாரத்தோடு கேட்கும் கேள்வி என இறைமகன் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த சிலர் நினைத்தது போன்று இன்றும் எம்மில் சிலர் நினைக்கலாம். ஆனால் அதே ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து இன்று 2019ம் வருடத்தில் எம் ஒவ்வொருவரையும் “நீங்கள் நான் யார் எனச்சொல்கிறீர்கள்” எனக் கேட்பதாகவிருந்தால் அதற்கு நாம் கொடுக்கும் பதில் என்னவென? எம்மை வேறுவிதமாகச் சிந்திக்கவும் இன்றைய நற்செய்தி எமக்கு அழைப்பு விடுக்கின்றது. இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசுவை “நீர் மெசியா” என தலைமைச்சீடர் பேதுரு அறிக்கை செய்வதனை காண்கின்றோம். படிப்பறிவற்ற பேதுருவுக்கு இறைமகன் இயேசு ஒரு இறை வாக்கினராகவோ, அல்லது சமூகத்தில் பின் தங்கிய மக்களுக்கு உதவிடும் ஏழைப் பங்காளனாகவோ அல்லாது அவரே மெசியா என்பது தெரிந்தது மட்டுமல்ல, இயேசுவிடம் இறை வல்லமை நிறைந்திருந்தது எனவும் தூய ஆவியின் ஆற்றலால் தெரிவிக்கப்பட்டிருந்தார். பேதுரு போன்று இறைமகன் இயேசுவை எமது மீட்பர் என பெருமையாக அறிக்கை செய்து நாம் ஏற்றுக் கொள்கிறோமா? இவ்வுலகக் காரியங்களில் திறமை படைத்த பலரை நாம் போற்றுகிறோம், புகழுகிறோம், விழா எடுக்கின்றோம். எனினும் எல்லாம் செய்ய வல்லவரான இறைமகன் இயேசுவை எமது மீட்பராக, எமது மெசியாவாக அடையாளம் கண்டுள்ளோமா? இறைமகன் இயேசு பாடுபட்டு மரணமடைய முன்னரே பேதுருவால் அவரை மெசியா, மீட்பர் என பெருமையாக விசுவாச உணர்வோடு அறிக்கை செய்ய முடிந்திருப்பின், எமக்காக இத்தனை பாடுகள் பட்டவரை நாம் ஏன் எமது இரட்சகராக பகிரங்கமாக அறிக்கை செய்யத் தயங்கவேண்டும்?. எனவே ஆண்டவர் இயேசுவை மெசியா என அறிவிக்கும் இறையாட்சிப் பணியில் நாம் எப்படிப்பட நிலையில் இருக்கின்றோம்? நாம் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழுகின்றோமா?